1986 மே 10]

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் துறை அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டில் ஒரு கூட்டத்தில் பேசுகிறபோது தொழிற்சாலைகள் தாங்களே மின் உற்பத்தி செய்வதற்கு அனுமதிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது மத்திய அரசிலே இருந்து உத்தரவு வரவில்லை என்று சொல்கிறார்கள். அப்படி என்றால் எப்படி அதைச் சொன்னார்கள் என்பதை நான் உள்ளபடியே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டும் ஒன்றுதான். நாம் அனுமதித்து மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். அவர்கள் இன்னும் அனுமதிக்க வில்லை.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தி என்பது சமூகத்தினுடைய ஜீவாதாரத் தேவையாகும். சமுதாயத்தினுடைய ஜீவாதாரத் தேவையைத் தனிப்பட்ட நபர்கள் உற்பத்தி செய்ய அனுமதி அளிப்பது தனிப் பட்ட நபர்கள் மேலாதிக்கம் செலுத்துவதற்கும், நிர்ப்பந்திப் பதற்கும் உரிய உரிமை வழங்குவதாக இருக்கிறது. எனவே மத்திய அரசு தன்னுடைய மின் உற்பத்தியைத் தனியாருக்குக் கொடுப்பது என்ற கொள்கையைப் பொறுத்தவரையில் மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று மாநில அரசு கூறுமா? மாநில அரசைப் பொறுத்தவரையிலும் இவ்வாறு தனியாருக்கு ஒப்படைப் பதில்லை என்ற ஒரு முடிவு எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மின் உற்பத்தியின் மூலம் மேலாதிக்கம் வரும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அச்சப்படத் தேவையில்லை. அந்த அளவுக்கு உற்பத்தி செய்வது என்பது அவர்களால் இயலாத காரியம். இருப்பினும் பற்றாக்குறையைப் போக்குவதற்கு அது துணை புரியும் என்ற வகையில்தான் வர வேற்கிறோம்.

மின் உற்பத்தி நிலையங்களுக்கு வெளிநாட்டு உதவி.

721.—(*வினா எண். 6232)—திரு. மு. இராமநாதன் ; மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வெளிநாட்டின் உதவியுடன் மின் நிலை யங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) வடசென்னை அனல் மின் நிலையத்திற்காக உலக வங்கியின் நிதி உதவியைப் பெற மாநில அரசு மத்திய அரசிடம் கேட்டுள்ளது. மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உத்தேசத் திட்டத்தின் மின் உற்பத்தித் திறன் எவ்வளவு? இந்தப் பணி எப்போது தொடங்கப்படும்? இதனால் பயன்படக் கூடிய நிலைமையில் மொத்தம் உற்பத்தியாகக்கூடிய மெகாவாட் மின்சாரம் எவ்வளவு? இதற்கு ஏதேனும் நிபுணர்கள் குழு அமைக்கப்பட்டிருக்கிறதா? அரசு ஏதேனும் பரிந்துரை செய்திருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 630 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட அந்த அனல் மின் நிலையம் 547.79 கோடி ரூபாயில் நிறுவப்பட இருக்கிறது. அந்த திட்டத்திற்கான முழு நிதி உதவியும் பெறுவதற்கு உலக வங்கியிடம் கடன் கோரப்பட்டுள்ளது. அவர்களும் ஆய்ந்து வருகிறார்கள். இந்த 7-வது 5 ஆண்டுத் திட்டத்திலேயே துவக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெர்மன் மற்றும் ஜப்பான் நாட்டு நிபுணர் குழு இது போன்ற ஒரு திட்டத்தைத் தமிழ்நாட்டிலே ஆய்வு செய்து ஒரு பரிந்துரையைச் செய்ததாக தகவல் இருக்கிறது. அதில் இது அடங்குமா அல்லது ஏதேனும் திட்டம் பற்றிய செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? வேறு ஏதேனும் இருக்கும் பட்சத்தில் வேறு எங்கு விரிவான புதிய மின் நிலையத்தை உருவாக்குகின்ற திட்டத்தைத் தமிழக அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்திய அரசின் மூலமாக உலக வங்கியிடம் கடன் பெறுவதற்குத்தான் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். ஏனென்றால் குறைந்த வட்டியில் கிடைக்கின்ற கடன் அது. அது இல்லை என்று ஆன பிறகுதான் வேறு நாடுகளின் உதவியைப் பயன்படுத்தலாமா என்று பரிசீலிக்க வேண்டி வரும். உலக வங்கியின் உதவி கிடைக்கும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, மின் உற்பத்தியினுடைய இன்றியமையாத தேவையை கணக்கில் எடுத்துக் கொண்டு, சோஷலிஸ்ட் நாடுகளுடன், குறிப்பாக சோவியத் யூனியன் உதவியைக் கொண்டு அணு மின் நிலையத்தை உருவாக்குவதற்குரிய ஆலோசனை ஏதாவது மைய அரசுக்கு மாநில அரசு முன் வைத்துள்ளதா ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா?

1986 மே 10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே கடலூரில் அமைய இருக்கிற அனல் மின் நிலையத்திற்கு சோவியத் யூனியன் உதவ முன் வந்துள்ளது. அது குறித்து நம் முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாரதப்பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். சோவியத் யூனியனின் தலைவர் கோபர்சேவ் அவர்கள் வருகை தருகிறபோது, பேச எடுத்துக் கொள்கின்ற பொருள்களில் இதுவும் ஒரு பொருளாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறோம். நம்மைப் பொறுத்த வரையில் யார், யார் பணம் கொடுக்க முன் வந்தாலும் பயன்படுத்தி மின் பற்றாக்குறையே இல்லை என்ற நிலையை உருவாக்கினால் அதுவே போதும்.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வெளிநாட்டு உதவியுடன் மின் நிலையம் அமைப்பதற்கு, வட சென்னையாக இருந்தாலும் சரி: கடலூராக இருந்தாலும் சரி, திட்டக் குழுவின் அனுமதி வந்துள்ளதா? அப்படி வரப்பெற்றிருந்தால் எந்தெந்தப் பகுதியில் வெளிநாட்டு உதவியுடன் மின் நிலையம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட இருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வட சென்னை மின் நிலையத்தைப் பொறுத்த வரையில் 16–4–1986 அன்று திட்டக் குழுவினுடைய அனுமதி கிடைக்கப் பெற்றிருக்கிறது. கடலூர் மின் நிலையத்தைப் பொறுத்த வரையில் திட்டம் ஆய்வு நிலையிலேயே உள்ளது.

திரு. பொ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு தற்போது ரஷ்யாவிடமும், பிரான்ஸ் நாட்டிடமும் புதிய அணு சக்தி மின் நிலையத்தை நிறுவுவதற்குப் பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கிறது. மைய அரசை வலியுறுத்தி தமிழ் நாட்டிலே வெளி நாட்டினரின் தொழில் நுட்ப உதவியுடன் புதிய அணு சக்தி மின் நிலையத்தை உருவாக்குவதற்கு தமிழக அரசு முயலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அணு மின் நிலையத்தைப் பொறுத்த வரையில் நீண்ட நாட்களாக ரஷ்யாவோடு நம்முடைய நாடு பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறது. அது பற்றி இன்னும் ஒரு முடிவிற்கு இந்திய அரசு வரவில்லை. அதுதான் உண்மையான நிலைமை. ஒரு முடிவிற்கு வந்தபிறகு, என்ன செய்யலாமோ அதற்கான நடவடிக்கையை அப்போது பார்த்துக் கொள்ளலாம்.